Volume 4 Issue 2 February 2023 E-ISSN: 2582-2063

# புரசலூர் ஊரும் பெயரும்

**செ. ரமேஷ்**
உதவிப்பேராசிரியர்
தேவாங்கர் கலைக் கல்லூரி, அருப்புக்கோட்டை

**முன்னுரை**

வரலாற்றிற்கு முந்தைய காலத்தில் குகையும் பெரிய மர பொங்குமே மனிதனுக்கு வீடாக இருந்தது. தீ கண்டுபிடிக்கப்பட்ட பின்பு நாடோடியாக அலைந்த மனிதன் நிரந்தரமாக வாழும் அமைப்பை உருவாக்கி கொண்டான். வேளாண்மை கண்டுபிடிக்கப்பட்ட பின்பு மனிதன் நாடோடி வாழ்க்கையை கைவிட்டு ஓரிடத்தில்தங்கி தங்களுக்கான நிலையை குடியிருப்பை உருவாக்கி கொண்டான் என்றும் வரலாற்று குறிப்பில் உள்ளது. அந்த வகையில் ஒவ்வொரு கிராமத்திலும் குடியிருப்புகள் உருவான விதம் அது வளர்ந்த விதம் பற்றி தெரிந்து கொள்ள முற்படும் போது கிராமத்தின் பெயர் உருவானவிதம் குடியிருப்புகள் உருவான விதம் என ஒவ்வொன்றும் பல வரலாறுடன் பண்பாட்டுத் தகவல்களை நமக்கு வழங்கிய வண்ணம் உள்ளது. இன்று நாம் பல கிராமங்களில் குடிசை வீடுகள் முதல் காங்கீரீட் வீடுகள் வரை பார்க்கிறோம். ஆனால் அந்த குடிசை வீடுகள் இப்பொழுது எந்த வகையில் கான்கீரீட் வீடுகளாக மாறின என்பதற்கான வரலாறு பண்பாட்டு பரிணாம வளர்ச்சியை நாம் அறிய முற்படுவதில்லை. ஒரு தனிமனிதன் தன் பொருளாதாரத்தில் முன்னேறும் போது குடிசை வீடுகளை கான்கீரீட் வீடுகளாக தன்னுடைய வசதிக்கு ஏற்றாற்போல் மாற்றி கொள்கிறான்.

**திருவாசகநல்லூர் (எ) புரசலூர்:**

அந்த வகையில் அருப்புக்கோட்டை அருகே புரசலூர் கிராமத்தில் பொருளாதார வசதிகள் இருந்தும் அனைத்தும் ஓட்டு வீட்டுகளாகவே உள்ளன. இதற்கு காரணம் புலவர் விட்ட சாபமே என்கின்றனர் புரசலூர் கிராமத்தினர் புரசலூர் கிராமத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இவ்வூரின் கன்மாயில் பாண்டியர் கால கல்லெட்டுகள் கண்டறியப்பட்டது. இக்கல்வெட்டுகளில் இவ்வூரின் பெயர் திருவாசக நல்லூர் என அழைக்கப்பட்டது. இதுவே பின்னாளில் **புரசலூராக** மாறிவிட்டது. சிலர் இவ்வூரைபுரைசலூர் என அழைக்கப்பட்டதாகவும் புரைசல் என்றால் இரகசியம் காத்தல் என பொருள்படும் கூறுகின்றனர். ஊரில் ஓட்டுவீடுகள் இருப்பதற்கு தனியே ஒரு கதை உள்ளது. இக்கிராமத்தில் 150 வீடுகள் உள்ளன. அனைத்தும் ஒட்டு வீடுகள் முன்பு குடிசை வீடுகள் இருந்துள்ளது. ஆனால் தற்போது பொருளாதார வசதியுள்ள ஒரு சிலராலும் கூட காங்கிரீட் வீடுகள் கட்ட முடியவில்லை. காங்கிரீட் வீடுகள் கட்ட **முயற்சி** செய்தாலும் ஏதாவது ஒரு உயிர் சேதம் ஏற்படுகிறது. சமீபத்தில் காங்கிரீட் வீடுகள் கட்ட முயற்சித்தவர்களின் வீட்டில் உயிர்பலி ஏற்பட்டுவிட்டது. இதனால் மற்றவர்களுக்கு தங்கள் வீடுகளில் இதுபோல் நடந்துவிடும் என்ற அச்சத்தில் காங்கிரீட் வீடுகள் கட்டுவது இல்லை. இக்கிராமத்தின் அடையாளம் ஒட்டு வீடுகளே கிராமத்தில் ஒட்டுவீடுகள் மட்டுமே கட்டுகிறார்கள் கான்கிரீட் வீடுகள் கட்டுவது இல்லை என்ற செய்தியறிந்து பாண்டியநாட்டு பண்பாட்டு மையத்தின் சார்பாக கள ஆய்வு செய்தோம். கிராமத்தில் இன்றைக்கும் ஓட்டு வீடுகள் மட்டுமே கட்டப்படுவதற்கு செவிவழி செய்தியாக இருக்கும் ஒரு நாட்டார் கதையே காரணம்.

**புலவர் சாபம்:**

ஒரு சமயம் இவ்வூரில் அறுவடையின் போது நெல்மணிகளை ஒரு புலவர் தன் கையால் மூன்று முறை அள்ளி செல்**வா**ராம். அவ்வாறு செல்வதை கண்ட சிலர் இவர் இவ்வாறு செய்வது நம்முடைய வளத்தை குறையவைக்கும் என அவரைக் கேலி செய்துள்ளனர். கோபமடைந்த புலவர் ஊருக்கு சாபம் விட்டு விட்டாராம். இவ்வூரில் கண்ணில்பட்ட அனைத்திற்கும் சாபம் இட்டுள்ளார். ஊரின் குடியிருப்புகளை பார்த்த அவர் இந்த குடியிருப்புகள் அனைத்தும் இவ்வாறே இருக்க வேண்டும். எவ்வளவு பொருளாதார வசதி ஏற்பட்டாலும் குடியிருப்புகளில் எந்தவித மாற்றமும் வரக்கூடாது. செம்மறி ஆடு எருமை மாடுகளை கண்டவர், இவைகளும் இந்த ஊரில் செழித்து வளரக்கூடாது என சாபம் இட்டுள்ளனர். இதனால் இவ்வூரில் எருமை மாடுகளும் செம்மறி ஆடுகளும்

வளர்க்கப்படுவதில்லை என்கின்றனர் கிராமத்தினர் மேலும் கோபத்துடன் புளிய மரத்தடியில் அமர்ந்த அவர். அந்த மரங்களில் அதிகமான புளியங்காய் இருப்பதைக் கண்டு புளிய மரங்களில் அதிகமான புளியங்காய் இருப்பதைக் கண்டு புளிய மரங்கயில் புளி காய்க்கக் கூடாது எனவும் சாபமிட்டுள்ளார். இருப்பினும் கால மாற்றத்தால் அவை வளர்க்க முற்பட்டாலும் ஆடுகளும், மாடுகளும் இறந்து விடுகின்றன என்று கிராமத்தினர் கூறுகின்றனர். இதற்கு புலவரின் ஒரு சாபமாக இருக்குமோ எனவும் நம்பிக்கையில் கால்நடைகளை வீடுகள் கட்டுவதில்லை. கட்டு வதையும் நிறுத்தி வைத்துள்ளதாக கூறுகின்றனர். இன்றைக்குஎவ்வளவோஅறிவியல் வளர்ந்துவிட்டாலும் ஏன்? ஏதற்கு? என்ற பகுத்தறிவு வளர்ந்து விட்டாலும் சாமானிய மக்களுடைய வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறான நாட்டார் கதைகள் மக்களுடைய அன்றாட வாழ்வியலை தீர்மானித்துக் கொண்டுதான் இருக்கிறது. பெயர் தெரியாத ஒரு புலவரின் சாபம் இந்த கிராமத்தில் மக்களுடைய வாழ்க்கையில் இன்றும் **தொடர்ந்து** கொண்டு தான் இருக்கிறது. என்ற இவர்களின் நம்பிக்கை போல் தமிழகத்தின் பல கிராம மக்களின் வாழ்வியலை தீர்மானிக்க கூடிய ஒரு காரணியாக இது போன்ற நாட்டார் வழக்காற்றில் கதைகள் நாம் காணலாம்.

**16ம் நூற்றாண்டு சதிக்கல்:**

தமிழகத்தில் கீழடி,சிவகளைபோன்ற இடங்களில் நடத்தப்படும் அகழாய்வில் தமிழர்களின் வரலாற்றுப் பெருமைகளை நிலைநிறுத்தம் அரிய தொன்மையான பொருள்கள் கண்டெடுக்கப்பட்டு உலகின் கவனத்தை தமிழகம் பெற்று வருகிறது இந்நிலையில் விருதுநகர் மாவட்டம், திருச்சுழி தாலுகாவைச் சேர்ந்த புரசலூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் சுற்றுச்சுவர் கட்டுவதற்குப் பள்ளம் தோண்டியபோது புதைத்திருந்த ஒரு சிற்பம் வெளிப்பட்டுள்ளது.

புரசலூரின் கண்டெடுக்கப்பட்ட இந்தச் சிற்பம் உடன்கட்டை ஏறி இறந்த பெண்ணுக்கு வைத்த சதிகல் ஆகும். போரில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகற்கள் நட்டு வழிபடும் முறை சங்க காலம் முதல் தமிழ்நாட்டில் இருந்துள்ளது. போரிலோ வேறு காரணங்களினாலோ கணவன் இறந்த பின் அவனுடனோ அல்லது தனியாகவோ உடன்கட்டை ஏறி இறந்த பெண்ணுக்கு நினைவுச் சின்னங்கள் அமைத்து வழிபடும் வழக்கமும் உள்ளது. இவற்றை மாலையீடு, மாலையடி, தீப்பாஞ்சம்மன், மாலைக்காரி, சீலைக்காரி என்றும் அழைக்கிறார்கள். சதி, மாலை ஆகிய சொற்களுக்குப் பெண் எனும் பொருளும் உண்டு. புரசலூரில் கண்டெடுக்கப்பட்ட சசதிக்கல் 2 ½அடி உயரமும், 1 ½அடி அகலமும் கொண்டது. இதில் ஆண் வலது கையும், பெண் இடது கையும் தொடையில் வைத்துள்ளது. ஆண் இடது காலை தொங்க விட்டு, வலது காலை மடக்கி வைத்து அமர்ந்த நிலையில் உள்ளது. பெண் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டும் அமர்ந்த நிலையில் உள்ளனர். ஆண் இடது கையில் கட்டாரினனும் குத்துவாளையும் பெண் வலது கையில் பூச்செண்டையும் ஏந்தியுள்ளனர். சிற்பத்தின் மேற்பகுதி கபோதம், கண்டம், கலசங்கள் ஆகிய பகுதிகளுடன் கோவிலில் சாலை விமானம் போன்ற அமைப்பில் உள்ளது.

**முடிவுரை:**

சிற்பத்தின் கீழ்ப்பகுதியில் காலைதொங்கவிட்டுஅமர்ந்தநிலையில் ஊஞ்சலாடும் ஒருபெண்ணின் சிறிய சிற்பம் உள்ளது. சதிக்கல் அமைப்பைக் கொண்டு இது கி.பி 17ம் நூற்றாண்**டை** சேர்ந்தது எனலாம். இப்பள்ளியின் வடக்கு பகுதியில் ஏற்கனவே இரு சதிகற்கள் மக்கள் வழிபாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டு இவ்வூரில் கி.பி. 11ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டியர் காலகல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**நூல்பட்டியல்:**

1) பொ. இராஜேந்திரன் சொ. சாந்தலிங்கம் வரலாற்று நோக்கில் விருதுநகர் மாவட்டம் - 2016
2) **ரா**.பி. சேதுப்பிள்ளை **ஊரும்** பேரும் - 1985
3) தினமலர் நாளேடு தேதி ஜனவரி 22,2022
4) தினமலர் நாளேடு தேதி செப்டம்பர் 21,2021
5) தொ. பரமசிவன் பண்பாட்டு அசைவுகள்.